முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1021

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.07.2022, சனிக்கிழமை

1. ஞானவேலி கொண்ட அரங்கனே
ஞானிகள் பலம்கொண்ட தேசிகனே
வானவர்கள் போற்றுகின்ற குருராஜனே
வள்ளலாய் வாழுகின்ற மாதவராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 32 நாள், 16.07.2022 சனிக்கிழமை)
வரமென அரங்கன் தொண்டர்கள் மூலமே
வையகத்தை காக்கும் மகா வேலியே
3. வேலியை அறத்தின் சக்தியாக
வினையறுக்கும் சன்மார்க்க சூட்சுமமாக
கலியுகத்தில் ஆறுமுகன் யான் அருளி உள்ளேன்
கருணைக்கொண்டு அரங்கன் திருவடி பற்றி
4. திருவடி பற்றி உலகோர் ஞானவேலியை
தொடர்ந்து வந்து அரங்கனின் தொண்டர்களாகி
ஆகியே உலகமாற்றத்திற்கு
அற்புதம் கூடிட சேவையாற்றிட
5. வகைபட அரங்கன் அருளாலே
வருபவர்கள் எல்லோரும் ஞானவான்களாகி
ஆகியே உலக மாற்றத்தை
அரங்கன் சக்தி கொண்டு நடத்திடுவர்
7. நடத்திட நாளும் மாற்றம் நிகழ
ஞானபண்டிதன் யான் அரங்கனுக்கு சக்தி தனை
சக்திதனை அளவிலா அருளிவர
சரணடைவு கொண்ட அனைவருக்கும்
8. அனைவருக்கும் அந்த சக்திபலம் கூடி
சாற்றிடுவேன் ஞானியர்களாகி உலகில்
பக்திமிகு அரங்கன் சித்திவழி
பழுதில்லா அற்புதங்கள் நிகழ்த்திடுவர்
9. நிலமதனில் அரங்கனே உயர் ஞானி
நிலைத்தன்மை கொண்ட அரங்கன்கொள்கையே உயர்கொள்கை
ஏற்றுவந்தால் உலகம் சடுதிமாறும்
இணைந்து அரங்கனோடு தொண்டாற்றினால் அனைவரும் ஞானியாக நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–